# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 22 of 2023 | **DW - 2** | : | Cross |
| **Name** | : | சின்னகண்ணு | **Father Name** | : | முருகன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.03.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 02.45 PM**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி மாரியப்பன் ஏக்கர் 1.70 சென்ட் நிலம் வாங்கியது தெரியுமா என்றால் தெரியும். கிரயம் வாங்குவதற்கு முன்பு அந்த நிலத்தை நில அளவையர் வைத்து ஊர் பெரியவர்கள் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டது தெரியுமா என்றால் அளந்தார்கள் தெரியும். அதன் பின்னிட்டு தான் பிரதிவாதிக்கு ஏக்கர் 1.70 சென்ட் நிலம் கிரயம் செய்து கொடுத்தனர் என்றால் சரிதான். அது முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அந்த நிலத்தை மாரியப்பனின் வாரிசுகள் அளந்து 3 பாகமாக பிரித்துக்கொண்டனர் என்று சொன்னால் சரிதான். அதுபோல் பிரித்துக் கொண்டு அவர்களது மக்கள் அனுபவம் செய்து வருவது தெரியுமா என்றால் தெரியும். மாரியப்பன் யாரிடமிருந்து நிலம் விலைக்கு வாங்கினார் என்றால் பழனியப்பன் என்பவரிடமிருந்து வாங்கினார்.

2. மாரியப்பன் நிலம் வாங்குவதற்கு முன்பு முழு சொத்தையும் பழனியப்பன் வாதி கணபதிக்கு எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால்

சரிதான். அப்படி ஒரு ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்பந்த ஆவணம் தான் அந்த ஒப்பந்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். அந்த **ஒப்பந்த ஆவணம் வா.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கணபதி அவர் வாங்கிய நிலத்தை அவர் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் ஆமாம் இரண்டு ஏக்கர் அனுபவம் செய்து வருகிறார். வாதி கணபதி சிட்டாப்படி 2 ஏக்கர் 63 சென்ட் நிலத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது 2 ஏக்கர் தான் அனுபவம் செய்து வருகிறார். வாதி 2 ஏக்கர் அனுபவம் செய்து வருகிறாரா அல்லது ஏக்கர் 2.63 சென்ட் அனுபவம் செய்து வருகிறாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த அனுபவத்தின் அடிப்படையில் தான் வருவாய்த் துறையில் அவருக்கு ஏக்கர் 2.63 சென்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

3. அந்த பட்டாபடி அவர் பட்டாவில் கண்ட முழு நிலத்திற்கும் தென்னந்தோப்பு வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் 2 ஏக்கர் அனுபவம் செய்வது தான் எனக்கு தெரியும் மீத நிலம் புறம்போக்கு நிலம் ஆகும். நான் 63 சென்ட் நிலம் தனியாக உள்ளது என்று சொல்கிறேன் அதில் வாதி தென்னந்தோப்பு வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி 63 சென்ட் நிலத்திற்கு பிரதிவாதிகள் எப்பொழுதும் சென்று அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் மாமன் மச்சான் உறவு முறை அதே போல் வாதியும் மாமன் மச்சான் உறவு முறை. கணபதி தற்போது எங்கு குடியிருந்து வருகிறார் என்றால்

தர்மபுரியில் குடியிருந்து வருகிறார். அவர்களுடைய குடும்ப நிகழ்ச்சிக்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். அவருடைய மகள் திருமணத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். வாதிகள் நெருக்கமான உறவினரா பிரதிவாதிகள் நெருக்கமான உறவினரா என்றால் இருவரும் ஒன்றுதான்.

4. தாவா சொத்து தொடர்பாக ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் இல்லை. அவர் அவர்கள் நிலத்தை அவரவர்கள் சுமூகமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனவே வாதி ஏக்கர் 2.63 சென்ட் நிலத்தையும் பிரதிவாதிகள் ஏக்கர் 1.70 சென்ட் நிலத்தையும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் நாங்கள் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தது தான் எனக்கு தெரியும் அதன் பின்னிட்டு தெரியாது இரண்டு ஆவணங்களும் ஒரே தேதியில் எழுதப்பட்டது. மாரியப்பன் கணபதியிடம் சென்று அவர் ஒப்பந்தம் செய்த சொத்துக்களில் தனக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பின்பு தான் அவர் பெயரில் விற்பனை செய்யப்பட்டது என்றால் அவர் கேட்டது எனக்கு தெரியாது. வாதி ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும் கணபதியிடம் வேண்டி கேட்டுக் கொண்டதால் தான் அவர் ஒப்புக்கொண்டு மாரியப்பன் பெயரில் கிரைய ஆவணம் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

5. அந்த நிலம் சம்பந்தமாக கிரையம் பேசப்பட்டதற்கு பின்னிட்டு நான் செல்லவில்லை, அது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி 2 ஏக்கர் 63 செண்டு நிலத்திற்கு பட்டா பெற்று எந்த பிரச்சினையும்

இல்லாமல் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அவரவர் நிலத்திற்கு நேராக உள்ள ஏரி புறம்போக்கை அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

**முடிவு நேரம் – 03.10 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.